**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT & SESSIONS COURT**

**MADURAI**

**Pro.O.P. NO. 74 /2024 P.W.1**

| | |
|---|---|
| Name : திருமதி.செல்வி | Father's Name: |
| Caste : | Religion: |
| Village : | Taluk: |
| Calling : | Age: |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 02.08.2025.

மனுதாரர் ஆஜர். மனுதாரர் தரப்பில் நிரூபணவாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டது. சத்திய பிரமாணம் செய்யப்பட்டு **அதன் தொடர்ச்சியாக முதல் விசாரணை**

நான் இவ்வழக்கில் மனுதாரர் ஆவேன். எனது நிரூபண வாக்குமூலத்தை சாட்சியமாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். எனது தகவலின் பேரில் தான் தயார் செய்யப்பட்டது. அதை படித்து பார்த்து தான் கையெழுத்து செய்தேன். மேற்படி நிரூபண வாக்குமூலம் ம.சா.1ன் சாட்சியமாக பதிவு செய்யப்படுகிறது.

எனது கணவர் முருகேசன் 06.02.2021ம் தேதி எழுதி வைத்த பதிவு செய்யப்படாத உயில் சாசனத்தை தாக்கல் செய்கிறேன். அது **ம.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எனது கணவரது இறப்புச் சான்றிதழின் ஆன்லைன் நகலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட நகலை தாக்கல் செய்கிறேன். அது **ம.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எனது மகன் வீரபுத்திரனின் இறப்பு சான்றிதழை ஆன்லைன் நகலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட நகலை தாக்கல் செய்கிறேன். அது **ம.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னுடைய மகனுடைய வாரிசு சான்றிதழின் ஆன்லைன் நகலுடன் ஒப்பீடு

செய்யப்பட்ட நகலை தாக்கல் செய்கிறேன். அது **ம.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எனது ஆதார் அட்டையின் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட நகலை தாக்கல் செய்கிறேன். அது **ம.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எனது குடும்ப அட்டையின் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட நகலை தாக்கல் செய்கிறேன். அது **ம.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**நீதிமன்ற கேள்வி** - உங்களுக்கு மொத்தம் எத்தனை குழந்தைகள் ?

**பதில்** - 2 மகன், 1 மகள். அவர்கள் பெயர் வீரபத்திரன், சுசீலா, கேசவன்.

**நீதிமன்ற கேள்வி** - இறந்துபோன முருகேசனுக்கு வேறு வாரிசுகள் யாரும் உள்ளனரா ?

**பதில்** - இல்லை.

Sd/- செல்வி

திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

Sd/- G.Muthukumaran,
முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
மதுரை.